1982 ஏப்ரல் 3]

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 அம் ஆண்டு தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.